1990 மே 9]

திரு. இரா. மதிவாணன் : பேரவைத் தலைவர் அவர்களே. முந்தைய அரசில் இந்தக் குழுவில் இருந்த உறுப்பினர்களைவிடக் கூடுதலாக உறுப்பினர்களைச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு சூழ்நிலைக்கேற்ப கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கன்று வளர்ப்புத் திட்டம்.

* 6538 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தமிழ்நாட்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் கன்று வளர்ப்புத் திட்டத்திற்கு மூன்றில் ஒரு பங்கு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) வங்கி வழங்கும் கடன் உதவியை ஊக்குவிக்க அரசு மானியம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

(அ) தஞ்சை மாவட்டத்தில் சில பகுதிகளிலிருந்து சென்ற மீனவர்கள் திரும்பாதது குறித்து, புயல் விளைவித்த பாதிப்புகளையொட்டி எடுக்கவேண்டிய பல்வேறு நடவடிக்கைகள் குறித்தும்.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து மீனவர்கள் காணாமல் போன சில விவரங்களை நானும்